**D.V.C. 16 of 2019** **Previous Date : 08.04.2022**

**RW1**

**சேந்தன் பிரபு த/பெ.ஆறுமுகம்**

**10.11.2025**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 10.11.2025.**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நானும், மனுதாரர் வித்யாவும் விருப்பப்பட்டு திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு எனது வீட்டில் சம்மதம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர் வித்யா பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. மனுதாரர் வித்யா பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு மனுதாரரின் வீட்டில் இருந்து நகை, பண்டபாத்திரம், சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. சரோஜினி என்ற மினி பஸ்ஸை நான் உரிமையாளராக வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல, ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடத்தூரில் KVK செங்கல் சேம்பரில் நான் பங்குதாரராக இருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரரை அவர் வீட்டில் இருந்து பணம் வாங்கி வரவேண்டும் என்று வற்புறுத்தினேன் என்றால் சரியல்ல. நான் வற்புறுத்தவில்லை என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு முதலில் வேறு திருமணம் நடந்த விபரம் மனுதாரருக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் எனது முதல் திருமணத்தின் விவாகரத்து உத்தரவை காட்டி மிரட்டிய போது தான் மனுதாரருக்கு அந்த விபரம் தெரியும் என்றால் சரியல்ல. 2ம் மனுதாரர் அஸ்வின் எனது மகன் என்றால் சரிதான். 2ம் மனுதாரர் அஸ்வின் 1ம் மனுதாரரிடம் இருக்கிறார் என்றால் சரிதான், நான் தான் வைத்திருந்தேன். நான் 2ம் மனுதாரரை என்னுடன் வைத்திருந்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்த பின்பு எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்ட பின்பு குழந்தை 1ம் மனுதாரர் வசம் மட்டுமே இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 1ம் மனுதாரரை பார்க்க வேண்டும் என்றும், எனது கட்டுபாட்டிற்கு அனுப்ப வேண்டும் என்றும், நீதிமன்றத்தில் மனு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தொண்டு நிறுவனத்தில் ஓட்டுநராக இருந்தேன் என்று

சொல்லியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, Suzlon கம்பெனியில் ஓட்டுநராக இருந்தேன். நான் பழனி நகர் காவல் நிலையத்தில் CSR எண் 254/2018 என்று மனு கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் எனது அப்பாவின் பேச்சை கேட்டு கொண்டு 1ம் மனுதாரரை கொடுமைபடுத்தி குழந்தையுடன் வெளியே அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு நான் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் குழந்தைக்கு கொடுக்க கடமைபட்டவர். நான் சரோஜினி மினி பஸ் உரிமையாளர் இல்லை என்றும், KVK சேம்பரில் பங்குதாரர் இல்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. KVK சேம்பர் இருக்கும் நிலம் எனது பெயரில் பதிவாகியுள்ளது என்றாலும் நான் அதன் உரிமையாளர் என்றாலும் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.11.10 18:20:41 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.